O.S. No.9/2021

18.12.2024

**வா.சா.1**

**திரு தம்பி தேவேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்தை என் சித்தப்பா சிவானந்தத்தால் எழுதி வைக்கப்பட்ட உயில் அடிப்படையில் உரிமை கோருகிறேன். தாவா சொத்து என் சித்தப்பா சிவானந்தத்திற்கு சொந்தம் என்பதற்கு கிரய சாசனம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து என் சித்தப்பாவிற்கு எதன் அடிப்படையில் சொந்தமானது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சொத்தின் உரிமையாளர்தான் தன் சொத்தை 3-வது நபருக்கு உயில் எழுதி வைக்க உரிமையுள்ளவர் என்பது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.17 ல் எதன் அடிப்படையில் சொத்து உரிமையுடையது என கூறப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.17 அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.17 படி அனுபவத்தில்

இருந்ததாக தெரிவித்து உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது சித்தப்பா சிவானந்தத்திற்கு அனுபவம் மற்றும் உரிமையியல் இருந்ததற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.17 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்பதால்தான் அசல் ஆவணத்தை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.17 ஒரு செல்லத்தகாத உயில் ஆவணம் என்றால் தவறு. செல்லத்தகாத ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தின் உரிமையை கோருவதற்கு யாதொரு அருகதையும் கிடையாது என்றால் தவறு. வா.சா.ஆ.17 ல் என் சித்தப்பாவிற்கு உரிமையையுள்ள சொத்து என தெரிவிக்கப்படவில்லை எனவும் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் எந்தவித உரிமையும் கோர இயலாது எனவும் சொன்னால் தவறு. வா.சா.ஆ.17 ல் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்பதற்கான தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. ஸ்டாம்ப் யார் வாங்கி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஸ்டாம்ப் பெறப்பட்டது சாத்தான்குளம் என்று குறிப்பிடப்பட்டள்ளது அதை வாங்கியது யார் என்று தெரியாது. வா.சா.ஆ.17 எங்கு டைப் செய்யப்பட்டது என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்து என் சித்தப்பாவின் அனுபத்தில் இருந்ததாக உயில் எழுதப்பட்டுள்ளதே

தவிர என் சித்தப்பாவிற்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையுடம் கிடையாது என்றால் தவறு. சொத்தின் உரிமையாளரே உயில் எழுத வேண்டுமே தவிர அனுபவத்தின் அடிப்படையில் உயில் ஆவணம் எழுதி வைக்க இயலாது. தாவா சொத்தை அனுபவிக்கும் நோக்கத்தில் வா.சா.ஆ.17 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் தவறு. நான், பொன்னையன், சக்திவேல், செந்தில் ஆகியோர் சேர்ந்து வா.சா.ஆ.17 மோசடியாக என் சித்தப்பா சிவானந்தம் எழுதி கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் தவறு. தாவா சொத்தின் உரிமையாளர் நடராஜ பிள்ளையை எனக்கு தெரியாது. நடராஜ பிள்ளைக்கு தாவா சொத்து சொந்தமானது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நடராஜனின் மனைவி கோமளவள்ளி. தாவா சொத்தை கோமளவள்ளி அம்மாள் கலிபுல்லா என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் ஆமாம். கலிபுல்லா இறந்து விட்டார். வா.சா.ஆ.9 தாவா சொத்தை கோமளவள்ளி மற்றும் அவரது வாரிசுதாரர்கள் கலிபுல்லா என்பவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரய சாசனம் என்றால் சரி. தாவா சொத்தை 3 முதல் 7 பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதிக்கு 11.03.2019 அன்று கிரய சாசனம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் அந்த கிரய சாசனம் வா.சா.ஆ.10 என்றால் ஆம். 1-ம் பிரதிவாதிக்கு சொந்தமான தாவா சொத்தை 2-ம் பிரதிவாதிக்கு 17.12.2020 அன்று

கிரயம் செய்து கொடுத்துள்ளார், அது வா.சா.ஆ.11. தாவா சொத்துக்கு உரிமை இல்லாத நான் வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.11 வரை செல்லத்தகாக ஆவணங்கள் என பரிகாரம் கோர எனக்கு அருகதை கிடையாது என்றால் தவறு. சிவானந்தம் உயிருடன் இருக்கும்போது தாவா சொத்து தனக்கு சொந்தமென்று கலிபுல்லா, கோமளவள்ளி ஆகியோருக்கு எதிராகவோ வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. சிவானந்தத்திற்கே தாவா சொத்தில் உரிமையில்லாத நிலையில் நான் வழக்கு தாக்கல் செய்ய அருகதை கிடையாது என்றால் தவறு. தாவா சொத்தில் கணபதி காட்டன் பஜார் என்ற கடை இருந்து வருகிறது என்றால் தவறு. உயிலின் அடிப்படையில் தாவா சொத்திற்கான பட்டாவோ, சொத்து வரி ரசீதோ, மின் இணைப்பு செலுத்தியதற்கான ரசீதோ, தண்ணீர் வரி ரசீதோ என் அனுபவத்தில் இருப்பது என்பதை காண்பிப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2024.12.18 15:52:13 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.